Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 55

செவ்வாய்க்கிழமை
20 ஜனவரி 2026

தை 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## கடந்த வருடம் 821 கிலோ ஹெரோய்ன் கைப்பற்றல்

கொழும்பு, ஜன. 20
நாடளாவிய ரீதியில் கடந்த வருடம் 821 கிலோ ஹெரோய்ன் போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் »11

# செம்மணிப் புதைகுழியில் விரைவில் அகழ்வுப் பணி!

## தேங்கியிருக்கும் தண்ணீரை அகற்ற பெப்ரவரி 9ஆம் திகதி நடவடிக்கை

**யாழ்ப்பாணம், ஜனவரி 20**

**அரியாலை - செம்மணி மனிதப்புதைகுழியில் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன. புதைகுழியில் தற்போது தண்ணீர் தேங்கியுள்ள நிலையில், அதை அகற்றும் பணிகளை சட்ட மருத்துவ அதிகாரியின் கண்காணிப்பின் கீழ் பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.** »11

அகழ்வுப் பணிகள் பூர்த்தியாகும்வரை

## சித்துப்பாத்தி மயானத்தின் நிலத்தோற்றம் மாறக்கூடாது

சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன. 20
செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகள் நிறைவேறும் வரை, சித்துப்பாத்தி இந்து மயானத்தின் நிலத்தோற்றத்தை மாற்றக்கூடாது என சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
சித்துப்பாத்தி »11

பாடத்திட்டச் சர்ச்சை;

## பிரதிப் பணிப்பாளருக்கு கட்டாய விடுமுறை!

விரிவு பக்கம்:-11

## தன்னிச்சைப் போக்கில் செயற்படுகின்றது அரசு

வடமாகாண அவைத்தலைவர் விசனம்

யாழ்ப்பாணம், ஜன. 20
ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வடக்கு மாகாணத்தில் தன்னிச்சையான முறையிலேயே செயற்பட்டு வருகின்றது.
வடமாகாண அவைத் தலைவரான என்னுடன், எந்தவொரு விடயங்களிலும் கலந்துரையாடப்படுவதில்லை - இவ்வாறு சீ.வீ.கே.சிவஞானம் தெரி »11

## அரசாங்கத்துக்குள் பல பிரபாகரன்கள்

கொளுத்திப் போடுகின்றார் வீரசேகர



கொழும்பு, ஜன. 20
ஸ்ரீலங்கா அரசாங்கத்தில் இன்று பல பிரபாகரன்கள் உள்ளனர். அவர்களிடம் இருந் நாட்டைப் பாதுகாப்பது சிக்கல் நிறைந்ததாக மாறியுள்ளது - இவ்வாறு முன்னாள் அமைச்சர் வீரசேகர தெரிவித்துள்ளார்.
திருகோணமலைக் கடற்கரையில் அத்துமீறி புத்தர்சிலை அமைத்த வழக்கு நீதி »10

## அகழ்வுப் பணிக்கு மீண்டும் பட்ஜெட்!

யாழ்ப்பாணம், ஜன. 20
செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கு மீண்டும் பட்ஜெட்டை முன்வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.
செம்மணிப் புதைகுழி அகழ்வுக்காக ஏற்கனவே நிதி விடுவிக்கப்பட்டிருந் »11



## ரூபா சரிவு

கொழும்பு, ஜன. 20
இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று மேலும் சரிவை எதிர்கொண் »11

## தமிழரசின் உள்ளக விவகாரத்தில் அநுர அரசு தேவையற்ற தலையீடு

தமிழரசின் பதில் தலைவர் சீ.வீ.கே. எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஜன. 20
தமிழரசுக் கட்சின் உள்ளக விவகாரத்தில் தேசிய மக்கள் சக்தியினர் தலையிடக்கூடாது என்று, தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தேசிய மக்கள் சக்தியினர், அரசநிதியில் வடக்குக்கு வந்து 'ஷோ' காட்டுவதை நிறுத்த வேண்டும். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களான சிறீதரன், சுமந்திரன் தொடர்பிலோ, கட்சியின் உள்வீட்டு விவகாரங்களிலோ தலையிட வேண்டிய அவசியம் இல்லை. »11

திருகோணமலையில் புத்தர்சிலை

## கைதான தேரர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு!



கொழும்பு, ஜன. 20
திருகோணமலை பிரதான கடற்கரைப் பகுதியில் அத்துமீறி புத்தர்சிலை வைத்த விவகாரத் »11

வவுனியாவில் சோகம்

## நீராடச்சென்ற மாணவன் தண்ணீரில் மூழ்கிப் பலி



வவுனியா, ஜன. 20
வவுனியா மயிலங்குளம் குளத்தில் நீராடச் சென்ற மாணவன், நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.
இந்தத் »10

## எலிக்காய்ச்சலால் அல்வாய்வாசி பலி

யாழ்ப்பாணம், ஜன. 20
எலிக்காய்ச்சல் காரணமாக குடும்பத் தலைவர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம் - அல்வாய் பகுதியைச் சேர்ந்த அன்னலிங்கம் அஜந்தன் (வயது-42) »11

முச்சந்தி முராரி

"வீட்டுக்கட்சியை மற்றவை விமர்சிக்கேலாது. ஏனெண்டால் அவையே சொந்தக்கட்சியை சந்தி சிரிக்க வைப்பினம் கண்டியளோ"

கந்தரோடை விகாரையின் பெயர்ப்பலகை அகற்றல்

## தவிசாளர் பிரகாஷிடம் பொலிஸார் விசாரணை

யாழ்ப்பாணம், ஜன. 20
கந்தரோடை விகாரையின் சட்டவிரோதப் பெயர்ப்பலகையை அகற்றிய விவகாரம் தொடர்பில் வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் தவிசாளர் தியாகராசா »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கை

கொழும்பு, ஜன. 20

எதிர்வரும் 23ஆம் திகதி முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் மருத்துவ நெருக்கடிகளுக்குத் தீர்வை வழங்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றது. எனினும், இதுவரை காத்திரமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதையடுத்தே, எதிர்வரும் 23ஆம் திகதி முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (ம)

# சட்டவிரோத பணநகர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை

## மத்திய வங்கி நடவடிக்கை

**கொழும்பு, ஜன.20**

**பணமோசடி மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியுதவி செய்தல் உள்ளிட்ட விடயங்களுக்கு எதிரான செயற்பாடுகளை இலங்கை மத்திய வங்கி வலுப்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.**

இலங்கை மத்திய வங்கியின் உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகளுக்காக, சர்வதேச அரசுகளுக்கிடையேயான நிதி நடவடிக்கைகளுக்குரிய பணிக்குழுவுடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை இலங்கை மத்திய வங்கி கைச்சாத்திட்டுள்ளது என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள் ளது.

இந்த நிதியியல் செயற்பாடுகளில், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், பொலிஸ்துறை, சட்டமா அதிபர் திணைக்களம், கணக்காய்வாளர் நாயகம், அனைத்து வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள், கையூட்டல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு, இலங்கைச் சுங்கம், இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு அதிகாரசபை, குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் ஆகியன இணைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய முயற்சியினூடாக, சட்டவிரோத எல்லை கடந்த பணநகர்வுகளைத் தடுக்கமுடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (எ-இ)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 19.01.2026 | திங்கட்கிழமை | U | 4 2 8 3 9 7 | 0787 |

**Super Ball**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 19.01.2026 | திங்கட்கிழமை | 3053 | P | 02 46 65 75 |

**சனிதா**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 19.01.2026 | திங்கட்கிழமை | B | 03 04 72 77 | 5214 |

**SASIRI**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 19.01.2026 | திங்கட்கிழமை | 0883 | 12 32 33 |

**லக்ன ராசி**

| திகதி | தினம் | ராசி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 19.01.2026 | திங்கட்கிழமை | துலாம் | 23 29 36 54 | 4765 |

**KAPRUKA**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 19.01.2026 | திங்கட்கிழமை | U | 28 | 11 18 59 67 | 2229 |


**அத கோடிபதி**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 19.01.2026 | திங்கட்கிழமை | N | 07 34 46 64 | 2879 |

# வாகனங்களுக்கு புகைச்சோதனை

யாழ்ப்பாணம், ஜன.20

நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வாகனங்களுக்கான புகைப்பரிசோதனை எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது. வாகன உரிமையாளர்கள் அன்று தமது வாகனங்களுக்கு புகைப்பரிசோதனையை மேற்கொள்ள முடியும் என்று என்று பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (க-9)



# 'கல்விச்சீர்த்திருத்தம் வேண்டும்' பெற்றோர் தொடர் போராட்டம்!

கொழும்பு, ஜன.20

இடைநிறுத்தப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்தங்களை மீண்டும் நடைமுறைப்படுத்தக் கோரி, கல்வி அமைச்சுக்கு முன்பாக பெற்றோர் குழுவொன்று அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டது. 'தரம் 06 பெற்றோர் சங்கம்' என்ற பெயரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தத் தொடர் போராட்டம் நேற்றுக்காலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இடைநிறுத்தப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களை மீண்டும் நடைமுறைப்படுத்தக் கோரி, பொலநறுவை, காலி உள்ளிட்ட பல பகுதிகளிலும் போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஆயினும் புதிய கல்விச் சீர்திருத்தச் செயற்பாட்டில் உள்ள சிக்கல்கள் தொடர்பாக பெற்றோர் சரியான புரிதல் இல்லாமல் போராட்டம் நடத்துகின்றனர் என்று அதிபர் தர சங்கத்தின் செயலாளர் நிமல் முதுங்கொடுவ தெரிவித்துள்ளார். (எ-இ)



# தனியார் பஸ்களுக்கு விரைவில் ஜி.பி.எஸ்.

கொழும்பு, ஜன.20

இந்த ஆண்டு அனைத்து தனியார் பேருந்துகளிலும் ஜி.பி.எஸ். சாதனங்களைப் பொருத்த முயற்சிகள் எடுக்கப்படும் என்று மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் காமினி ஜாசிங்க தெரிவித்துள்ளார். மேல் மாகாணத்தில் இயக்கப்படும் தனியார் பேருந்துகளில் ஜி.பி.எஸ். சாதனங்களைப் பொருத்தும் பணிகளை எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் முடிவுறுத்த எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ்கள் சரியான நேரத்தில் இயக்கப்படுவதில்லை என்றும், அதிக எண்ணிக்கையிலான பேருந்துகள் மிக மெதுவாகவும், மிக வேகமாகவும் தங்கள் இலக்குகளுக்கு ஏற்ப இயக்கப்படுகின்றன என்றும் பயணிகளிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் தற்போது சுமார் 15 ஆயிரம் தனியார் பேருந்துகள் இயக்கப்படுகின்றன என்றும், இந்த ஆண்டு அனைத்து பேருந்துளிலும் ஜி.பி.எஸ். சாதனங்கள் பொருத்தப்படும் என்றும் காமினி ஜாசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)

# நிதி வழங்கும் பணியிலிருந்து விலகிய கிராம அலுவலர்கள்!

கொழும்பு, ஜன.20

டித்வா புயலால் பகுதியளவில் சேதமடைந்த வீடுகளுக்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் 5 இலட்சம் ரூபா கொடுப்பனவை வழங்கும் பணிகளில் இருந்து நேற்று முதல் விலகிக்கொள்ள கிராம உத்தியோகத்தர் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் உள்ள குறைபாடுகள் காரணமாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அந்தச் சங்கத்தின் இணைத் தலைவர் நந்தன ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கொடுப்பனவு வழங்கும் செயல்முறையை அரசாங்கம் இன்னும் முறையான வகையில் ஒழுங்குபடுத்தவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை, இதுதொடர்பான சுற்றறிக்கையில் கடுமையான குறைபாடுகள் உள்ளன என்று தெரிவித்து, பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள் சங்கம் மற்றும் அரச கணக்காளர்கள் சங்கம் என்பன ஏற்கனவே இந்தப் பணிகளில் இருந்து விலகியிருந்தன. (எ-இ)

# பெரும்போக அறுவடை யாழில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.20

யாழ்.மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கைக்கான அறுவடைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலையால் மழை பெய்யலாம் என்ற அச்சத்தால், அறுவடைப்பருவத்தை அடைந்துள்ள நெற்பயிர்களை அறுவடை செய்வதில் விவசாயிகள் மும்மரமாக ஈடுபட்டுள்ளனர்.

தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் வற்றாத நிலையிலும் சில விவசாயிகள் அறுவடை செய்து வருகின்றனர்.

அறுவடைக்காலம் பிந்தியுள்ள நிலையில் அநேகமான இடங்களில் நெல்லை உலர விடும் பணிகளிலும் விவசாயிகள் மும்மரமாக ஈடுபட்டுள்ளனர். (க-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசியலமைப்புப் பேரவை நியமனங்களில் இழுபறி!

## அரசாங்கம், எதிர்க்கட்சி முறுகலால் பேரவைச் செயற்பாடுகள் கேள்விக்குறி

**கொழும்பு, ஜன.20**

**அரசியலமைப்புப் பேரவையில் சிவில் சமூகப் பிரதிநிதிகளை நியமிப்பதில் அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.**

அரசியலமைப்புச் சபையில் வெற்றிடமாகியுள்ள மூன்று சிவில் சமூக உறுப்பினர்களை நியமிப்பது தொடர்பாக பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரிடையே இன்னும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை.

அனுலா விஜேசுந்தர, பிரதாப் ராமானுஜம் மற்றும் தினேஷா சமரரத்ன ஆகியோரின் பதவிக் காலம் கடந்த வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்த நிலையில், புதிய உறுப்பினர்களைப் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய இருவரினதும் ஒருமித்த இணக்கப்பாட்டுடன் மட்டுமே நியமிக்கமுடியும். இந்த நிலையில், பிரதமர் 7 பெயர்களையும், எதிர்க்கட்சித் தலைவர் 10 பெயர்களையும் முன்வைத்துள்ளனர். பிரதமர் முன்மொழிந்த முன்னாள் மாவட்டச் செயலாளர் ஒருவரின் பெயரை எதிர்க்கட்சித் தலைவர் நிராகரித்துள்ளார். பேச்சுவார்த்தையில் சபாநாயகரையும் இணைத்துக் கொள்ளவேண்டும் என்ற பிரதமரின் யோசனையையும், அரசியலமைப்பைச் சுட்டிக்காட்டி சஜித் நிராகரித்துள்ளார். இந்த மூன்று சிவில் சமூக உறுப்பினர்களின் நியமனம் தாமதமாவதால், உயர்நீதிமன்ற நீதியரசர்கள், பொலிஸ்மா அதிபர் போன்ற முக்கியமான பதவிகளுக்கான நியமனங்களை அங்கீகரிக்கும் அரசியலமைப்புப் பேரவையின் செயற்பாடுகள் பாதிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)



## மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த ஆயர்கள்

கொழும்பு, ஜன.20

கத்தோலிக்க ஆயர் பேரவையின் ஆயர்கள் குழு ஒன்று மல்வத்தை மற்றும் அஸ்கிரி மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து மதங்களுக்கிடையிலான சகவாழ்வு தொடர்பாக நேற்றுமுன்தினம் கலந்துரையாடியுள்ளது.

கண்டிக்குச் சென்ற இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் ஆயர்கள் குழு ஒன்று, சியாம் மகா நிகாயவின் மல்வத்தை பீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரி பீடத்தின் மகாநாயக்கர் வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் ஆகியோரைச் சந்தித்து, நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் மதங்களுக்கிடையிலான சகவாழ்வு தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளது. (எ-இ)

## கதிரியக்க வல்லுநர்கள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு. ஜன.20

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் அடையாளப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு அரச கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது. எதிர்வரும் 24ஆம் திகதி காலை 8 மணி முதல் 24 மணிநேர பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள்ளார். பணிபுறக்கணிப்புத் தொடர்பான எழுத்துபூர்வ அறிவிப்புகள் இரண்டு சந்தர்ப்பங்களில் சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், சாதகமான பதில் கிடைக்கவில்லை. அதையடுத்து தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு சங்கம் முடிவு செய்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## 925 பேர் கைது

கொழும்பு, ஜன.20

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் சுமார் 925 பேர் பெருமளவு போதைப்பொருள்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## விராஜின் கண்காணிப்பில் ரணிலின் லண்டன் வழக்கு!

கொழும்பு, ஜன.20

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் லண்டன் பயணம் தொடர்பான வழக்கு விசாரணை, மன்றாடியார் நாயகம் விராஜ் தயாரத்னவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க, லண்டன் சென்றபோது அரச நிதியை முறையற்ற வகையில் பயன்படுத்தினார் என்று குற்றம் சுமத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணையே விராஜ் தயாரத்னவின் கண்காணிப்புக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. (எ-இ)

## வெள்ளிக்கிழமை வெளுத்த சாயம்- 2

திறந்த வீட்டுக்குள்ள நாய் புகுந்தமாதிரி, மெடிக்கல் பக்கல்டிக்குள்ள யாழ்ப்பாணத்தைப் பற்றியோ, யாழ்ப்பாணக் கம்பஸைப் பற்றியோ முன்னபின்ன தெரியாத ஒரு சிங்களப் பிள்ளை ரண்டு மாதமாகக் களவா வந்து படிச்சிருக்கிறா எண்ட விசயத்தை அறிஞ்சதும் எல்லாருக்கும் கடும் அதிர்ச்சி. எண்டாலும் சில வேளை ஏதும் மிஸ்டேக் நடந்து, தாங்கள் தான் ஏதும் பதிவிலையும், மாணவர்களின்ர எண்ணிக்கையிலையும் பிழை விட்டிருப்பமோ எண்டு கம்பஸ்காரருக்கு ஒரு டவுட். அதால அந்தப் பிள்ளையைக் கூப்பிட்டு தன்மையா விசாரிச்சிருக்கினம். முதல்ல அவாண்ட பதிவிலக்கத்தைக் கேட்டிருக்கினம். அந்தச் சிங்களப்பிள்ளையும் ஒரு நம்பரைச் சொல்லியிருக்கிறா. ஆனால் அவா சொன்ன பதிவிலக்கத்தைச் செக் பண்ணிப் பார்த்தால், அந்த நம்பர் இன்னொரு தமிழ்ப் பிள்ளையின்ரையாம். இன்னும் கொஞ்சம் உறுக்கி விசாரிக்க, 'எனக்கு மெடிசின் கிடைச்சிருக்கு எண்டு யூ.ஜீ.சீ.யால (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவில இருந்து) லெட்டர் வந்தது. அதால வந்தன்' எண்டு அந்தச் சிங்களப் பிள்ளை சொல்லிச்சே தவிர, அப்பிடி ஒரு கடிதத்தைக் கண்ணில காட்டவேயில்லை. கடைசியா ஏ.எல். ரிசல்ட் சீற்றைக் கொண்டரச் சொல்லி வாங்கிப் பார்த்தால், அந்தப் பிள்ளைக்கு வெறும் மூண்டு' எஸ்' தானாம். சற் ஸ்கோரும் மைனஸில.

மெடிசின் மட்டுமில்ல, வேற ஒரு கோர்ஸூம் செய்ய முடியாத ரிசல்டை எடுத்துக்கொண்டு, வலுகெட்டித்தனமா இஞ்சவந்து ரண்டுமாதமா 'நானும் மெடிக்கல் ஸ்ருடண்ட்தான்' எண்டு ஊருலகத்தையும், கம்பஸையும் அந்தச் சிங்களப் பிள்ளை பேய்க்காட்டியிருக்கு. இதுக்கு முதலும் சயன்ஸ் பக்கல்டியில ( விஞ்ஞான பீடத்தில) ஒரு பெடியனும் பெட்டையும் இப்பிடிப் பதிவில்லாமல் படிச்சதைக் கண்டுபிடிச்சு, அவையைப் பிறகு வரவிடாமல் பண்ணினவை. அதைவிட வேற ஒரு நடவடிக்கையும் எடுக்கேலை. ஏனெண்டால், அவையை கம்பஸூக்க தகவல் எடுக்க இன்ரலிஜெண்ட்காரர் தான் அனுப்பி வைச்சவை எண்டும் அப்ப அரசல் புரசலாக் கதை வந்தது. அப்பவே விசாரணையை நடத்தி, எல்லாப் பீடங்களிலையும் படிக்கிற பிள்ளையள் உள்ளுக்க வாறதுக்கு கம்பஸ் அடையாள அட்டை கட்டாயம் எண்டு ரூல்ஸ் கொண்டு வந்திருந்தாலே, இந்தப் பிள்ளையெல்லாம் ரண்டு மாதம் பேய்க்காட்டி மெடிசின் படிச்சிருக்கேலாது.

இப்ப 'இந்தப் பிள்ளைக்கு நீங்கள் மெடிசின் படிக்க வரச்சொல்லி அறிவிச்சனீங்களோ?' எண்டு யூ.ஜீ.சீ. காரரைக் கேட்டு கம்பஸ்காரர் கடிதமொண்டு அவசரமா அனுப்பி இருக்கினமாம். அதுக்குப் பிறகுதான் என்ன நடவடிக்கை எடுக்கிறதெண்டு முடிவெடுப்பினமாம். ஆனால் அந்தப் பிள்ளை ஏன் இப்பிடிக் களவா வந்து படிச்சது? அதுவும் ஏன் கண்டியில இருந்து யாழ்ப்பாணத்துக்கு வரோனும்? எப்பிடி இஞ்சையுள்ள ஹொஸ்டல், லெக்சர்ஸ் எல்லாத்துக்கும் சிக்கல் இல்லாமல் போய் வந்தது? உந்தப் பிள்ளைமாதிரி ஆரும் எப்பவும் எந்த வகுப்புக்கும் கம்பஸூக்குள்ள போய்வாற மாதிரிதான் அங்கத்தை நடைமுறையள் பலவீனமா இருக்குதோ? இதுவரைக்கும் என்னெண்டு இப்பிடி அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை விட ஒரு பிள்ளை கூடப் படிக்குதெண்டு கண்டுபிடிக்காமல் விட்டவை? அந்தப் பிள்ளைக்கு உள்ளுக்க இருக்கிற ஆரும் உதவி செய்தவையோ? இப்பிடி நிறையக் கேள்வியள் இருக்குது. எல்லாத்துக்கும் காலம்தான் பதில் சொல்லோணும் கண்டியளோ.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொற்பதி- மணற்காடு வீதியைப் புனரமைக்குமாறு கோரிக்கை



**யாழ்ப்பாணம், ஜன.20**

**கடுமையாகச் சேதமடைந்துள்ள வடமராட்சி கிழக்கு பொற்பதி - மணற்காடு இணைப்பு வீதியை உடன் புனரமைக்கவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

மணற்காடு கிராமத்துக்கும், பொற்பதிக் கிராமத்துக்கும் இடையேயான சுமார் 500 மீற்றர் நீளமான வீதி பல ஆண்டுகளாகப் புனரமைக்கப்படவில்லை. பொற்பதி மற்றும் மணற்காடு கிராம மக்கள் மீன்பிடியைப்பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர்.

இந்த 500 மீற்றர் நீளமான வீதிச் சீரின்மை காரணமாக, சுமார் 8 கிலோமீற்றர் தூரம் சுற்றிப் பயணிக்கவேண்டியுள்ளது. பாடசாலை மாணவர்களும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. அந்தப் பகுதி மாணவர்கள் பெரும்பாலும் பருத்தித்துறைக்குச் சென்றே தமது கற்றலைத் தொடர்கின்றனர். இந்த வீதியை உடன் புனரமைத்து போக்குவரத்துத் தூரத்தை இலகுபடுத்த வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-27)

## மாற்றம் அறக்கட்டளைக்கு புதிய பணிப்பாளர் சபை

யாழ்ப்பாணம். ஜன.20

மாற்றம் அறக்கட்டளையின் 2026ஆம் ஆண்டுக்கான புதிய பணிப்பாளர் சபை தெரிவு சுண்டுக்குளியில் அமைந்துள்ள வளர்பிறை உள ஆற்றுப்படுத்தல் உளவள சிகிச்சை நிலையத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

அறக்கட்டளையின் இயக்குநராக பே.பெனிக்கஸ், தலைவராக அருட்கலாநிதி டேவிட் வின்சன் பற்றிக் அமதி, செயலாளராக எஸ். சிவகெங்காதரன், பொருளாளராக திருமதி வன்சலின் கில்பேட், உபதலைவராக சிவலோகநாதக் குருக்கள், உப செயலாளராக பே.றொனிபஸ், ஆலோசகர்களாக அருட்பணி எஸ்.டேமியன் அமதி. ஜோர்ஜ் ஜெஸ்ரின், திருமதி கர்த்தரின் பெர்னாண்டோ, க.புவனேஸ்வரன், திருமதி அ.தி. வேதிகா, எஸ், டிலக்ஷன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மாற்றம் அறக்கட்டளையின் தலைவருக்கு ஆளுமைச் செம்மல் என்ற பட்டத்தை கலைஞனின் குரல் பத்திரிகை அண்மையில் வழங்கிக் கௌரவித்திருந்தது. விருது பெற்ற அறக்கட்டளைத் தலைவர் நிகழ்வில் பாராட்டி மதிப்பளிக்கப்பட்டார். (க-159)

## மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜன.20

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி அரியநாயகன் புலம் வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவம் எதிர்வரும் 23ஆம் திகதி காலை 11.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 31ஆம் திகதி இடம்பெறுவதுடன் அன்று காலை 9.30மணிக்கு வசந்தமண்டபப் பூஜையும், 11 மணிக்கு விநாயகப் பெருமான் தேரில் ஆரோகணித்தலும் நடைபெறும்.

மறுநாள் தீர்த்தத் திருவிழா நடைபெறுவதுடன் அன்றைய தினம் காலை 9மணிக்கு வசந்தமண்டபப் பூஜையும், கழுதைப்பிட்டித் துறைமுகத்தில் சமுத்திரத் தீர்த்தமும் இடம்பெறும். மாலை கொடியிறக்கம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-20)

## மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.20

ஸ்ரீ சச்சிதானந்தா அறக்கொடை நிலையத்தின் ஏற்பாட்டில் கைதடி, நாவற்குழிப் பிரதேசங்களைச் சேர்ந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை ஸ்ரீ சச்சிதானந்தா நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்று அதிகாலை 3 மணிக்கு திருவாசக முற்றோதலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும். தொடர்ந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் கௌரவிப்பு, பஞ்சபுராணம் ஓதுதலில் வெற்றியீட்டியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-159)




## மக்கள் பாவனைக்கு மார்க்கண்டு வீதி

யாழ்ப்பாணம், ஜன.20

வலிகாமம் வடக்குப் பிரதேசசபைக்குட்பட்ட குட்டியப்புலம் மார்க்கண்டு வீதி தார்வீதியாகச் செப்பனிடப்பட்டுள்ளது.

வீதியில் புதிய பெயர்ப்பலகை பொறிக்கப்பட்டு வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் தவிசாளர் சோ.சுகிர்தனால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மக்கள் பாவனைக்காகத் திறக்கப்பட்டுள்ளது. (எ-41)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தேவையான பணம் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். புதிய முயற்சியைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும்.

**இடபம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**மிதுனம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் விட்டுக்கொடுத்துச் செல்லவும். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். தேவையான பணவரவு இருக்கும் என்பதால் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். சுபகாரியங்களுக்கான முயற்சி சாதகமாகமுடியும்.

**சிம்மம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். கணவன் - மனைவிக்கிடையே தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். எதிரிகளின் தொல்லைகள் நீங்கும். நண்பர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கன்னி:** தேவையற்ற செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படும். உடல்நலம் சற்றுப் பாதிக்கப்படும். தேவையில்லாத அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** மனதில் நிம்மதி ஏற்படும். தேவையான பணம் கையில் இருப்பதால் செலவுகளைச் சமாளிக்கமுடியும். எடுத்த காரியங்கள் தடையின்றிமுடியும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். சகோதரர்கள் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் தருவார்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும்.

**தனுசு:** குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதை இன்றைக்குத் தவிர்ப்பது நல்லது. உறவினர்கள்வகையில் வீண்செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது சிலருக்கு வாழ்க்கைத்துணையால் ஆதாயம் கிடைக்கும். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள்.

**கும்பம்:** தேவையில்லாத குழப்பங்களின் காரணமாக எந்தச் செயலிலும் ஈடுபட முடியாமல் தவிப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மீனம்:** குடும்பப் பொறுப்புகளை உற்சாகமாக நிறைவேற்றுவீர்கள். மாலையில் பள்ளி, கல்லூரிக்கால நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# போலிமாணவியும் சில கேள்விகளும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் நடைமுறைகளையும், இலங்கையின் இலவசக் கல்வி மரபையும் கேலிக்குள்ளாக்கும் விதமாக அரங்கேறியுள்ள 'போலி மருத்துவ மாணவி' விவகாரம், ஒட்டுமொத்தக் கல்விச் சமூகத்தையும் அதிர்ச்சிக்குள் தள்ளியுள்ளது. மருத்துவத்துறை என்பது மனித உயிர்களோடு தொடர்புடைய அதியுயர் பொறுப்புமிக்க ஒரு களம். அத்தகைய மருத்துவ பீடத்துக்குள், உயர்தரத்தில் வெறும் சாதாரண சித்திகளை மட்டுமே பெற்ற ஒரு மாணவி, எவ்விதமான ஆவணச் சரிபார்ப்புகளுமின்றி உள்நுழைந்து, விடுதி வசதிகளையும் பெற்று இரண்டு மாதங்களாகக் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது என்பது வெறும் தற்செயலான நிகழ்வாகத் தெரியவில்லை. செய்முறைப் பரீட்சைக்கான மாணவர் எண்ணிக்கை சரிபார்ப்பின் போதுதான் இந்த மோசடி வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது என்றால், அதுவரை பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு மற்றும் நிர்வாகக் கட்டமைப்பு என்ன செய்துகொண்டிருந்தன என்ற பலத்த சந்தேகம் எழுகிறது. பல ஆயிரம் மாணவர்களின் பகலிரவற்ற போராட்டத்துக்கும், கனவுக்கும் பின்பே கிட்டும் இந்த மருத்துவக்கல்வி வாய்ப்பைத் திருட்டுத்தனமாகத் துய்க்க முயன்ற அந்தப் போலி மாணவியின் செயல், ஆள்மாறாட்டத்துக்கு ஒப்பான 'கிரிமினல்' குற்றமாகும்.

இந்த மோசடியை அந்த மாணவி தனித்துச் செய்திருக்க வாய்ப்பில்லை. கண்டியைச் சேர்ந்த, அதுவும் தமிழ் தெரியாத அந்தப் போலி மாணவிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உள்ளக நடைமுறைகள், விடுதிப்பதிவுகள் மற்றும் மாணவர் வரவுப் பதிவேடுகளில் உள்ள ஓட்டைகள் அத்தனையும் துல்லியமாகத் தெரிந்திருக்க வாய்ப்பேயில்லை. எனவே, பல்கலைக்கழக நிர்வாகத்தின் உள்ளேயே அவருக்குச் சாதகமான ஒரு 'கறுப்பு ஆடு' அல்லது ஒரு குழு இயங்கியிருக்கவேண்டும். இந்தப் போலி மாணவி விவகாரம் என்பது ஒரு பனிப்பாறையின் நுனி மட்டுமே; இவரைப் போல இன்னும் எத்தனை பேர் தகுதியற்ற முறையில் போலி ஆவணங்களுடன் பல்கலைக்கழகத்தின் வெவ்வேறு பீடங்களில் உலாவருகிறார்களோ என்ற அச்சம் இப்போது பெற்றோர், மாணவர்கள் மத்தியில் முளைவிட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் பதிலுக்காகக் காத்திருக்கிறோம் என்று கூறி பல்கலைக்கழக நிர்வாகம் காலம் கடத்தாமல், உடனடியாக ஒரு உயர்மட்ட உள்ளக விசாரணையை ஆரம்பித்து, இந்தக் குற்றத்தோடு தொடர்புடைய சகலரையும் சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும்.

இனிவரும் காலங்களில் இத்தகைய சீர்கேடுகள் நிகழாமல் இருக்க, பல்கலைக்கழக நுழைவுச் செயல்முறை இன்னும் பாதுகாப்பானதாகவும், இறுக்கமானதாகவும் மாற்றப்படவேண்டும். ஒவ்வொரு மாணவருக்கும் பல்கலைக்கழகப் பதிவிலக்கம், உயர்தரப் பரீட்சைச்சுட்டெண், தேசிய அடையாள அட்டையுடன் இணைக்கப்பட்ட பிரத்தியேகக் குறியீட்டுடன் கூடிய அடையாள அட்டைகள் அவர்களின் அனுமதி நாளன்றே வழங்கப்படவேண்டும். விரிவுரை மண்டபங்கள் மற்றும் விடுதிகளுக்குள் நுழையும்போது கைரேகை அல்லது முக அடையாளத்தை உறுதிப்படுத்தும் உயிரியல் (Biometric) தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துவது இன்னும் சிறப்பானது. அத்துடன், புதிய மாணவர்கள் இணையும்போது அவர்களின் மூல ஆவணங்கள் பல கட்டங்களாகச் சரிபார்க்கப்படுவதை உறுதிப்படுத்தும் ஒரு வலுவான கண்காணிப்புக்குழு உருவாக்கப்படவேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பது ஈழத்தமிழர்களின் கல்வி அடையாளமாகவும், பெருமையாகவும் போற்றப்படும் ஒரு கல்விநிறுவனம்; அதன் கௌரவத்தைச் சீர்குலைக்க முயன்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை, இனி எவருமே இத்தகைய துணிச்சலான மோசடியில் ஈடுபட நினைக்காத அளவுக்கு ஒரு பாடமாக அமையவேண்டும் என்பதே எல்லோரதும் எதிர்பார்ப்பு.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**
**வானின் றமையா தொழுக்கு**

**பொருள்:** உலகில் மழையே இல்லையென்றால் ஒழுக்கமே கெடக்கூடும் என்ற நிலை இருப்பதால், நீரின் இன்றியமையாமையை உணர்ந்து செயற்படவேண்டும்.



# கணினி எழுத்தறிவு 38.4 வீதமாக உயர்வு



**கொழும்பு, ஜன.20**
**இலங்கையில் 2025ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில், கணினி எழுத்தறிவு விகிதம் 38.4 சதவீதமாக அதிகரித்துள்ளது என்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

நகர்ப்புறங்களில் 52.1 சதவீதமும், கிராமங்களில் 36.6 சதவீதமும், பெருந்தோட்டப் புறங்களில் 18.6 சதவீதமும் கணினி எழுத்தறிவு வீதம் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் கணினி எழுத்தறிவானது ஆண்களிடையே 39.9 சதவீதமாகவும், பெண்களிடையே 37.1 சதவீதமாகவும் பதிவாகியுள்ளது.

15 முதல் 19 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்கள் அனைவரும் 75.6 சதவீத கணினி எழுத்தறிவுடன் காணப்படுகின்றனர் என்றும், 5 முதல் 69 வயதுக்கு இடைப்பட்டவர்கள் தாமாகவே கணினியைப் பயன்படுத்தக் கூடியவர்களாக உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## தங்கத்தின் விலையில் அதிகரிப்பு

கொழும்பு, ஜன.20
இலங்கையில் தங்கத்தின் விலை நேற்றும் 3 ஆயிரம் ரூபாவால் உயர்வடைந்துள்ளது.

கொழும்பு செட்டியார் தெருவின் நேற்றைய தங்க விற்பனை நிலைவரப்படி, 22 கரட் தங்கம் பவுண் ஒன்று 3 இலட்சத்து 40 ஆயிரத்து 400 ரூபாவாகக் காணப்பட்டது. 24 கரட் தங்கம் பவுண் ஒன்று 3 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாவாகக் காணப்பட்டது. (எ-இ)





## துப்பாக்கி மீட்பு

கொழும்பு, ஜன.20
வாழைத்தோட்டம் பகுதியில், அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் கைவிடப்பட்டிருந்த தண்ணீர்த் தொட்டியில் இருந்து கைத்துப்பாக்கி மற்றும் வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டுத் தயாரிப்பான இந்தக் கைத்துப்பாக்கியுடன் 29 தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பாதுகாப்புத் தரப்பினரால் முன்னெடுக்கப்படுகின்றன. (க)

## கைபேசிகளைக் கடத்தியவர் கைது

கொழும்பு, ஜன.20
நாட்டுக்குள் சட்டவிரோதமாக கைபேசிகளைக் கொண்டுவர முயன்ற இலங்கையர் ஒருவர் கட்டுநாயக்க விமானநிலைய சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 34 மில்லியன் ரூபா பெறுமதியான 397 கைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## பிரதமர் ஹரிணி சுவிஸ் பயணம்

உலகப் பொருளாதார மன்றத்தின் 56ஆவது வருடாந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று அதிகாலை சுவிட்ஸர்லாந்து பயணமானார்.

சுவிட்ஸர்லாந்தின் டாவோஸ் குளோஸ்டர்ஸ் நகரில் இந்த மாநாடு நேற்று ஆரம்பமானது. மாநாட்டில் பிரதமர் சர்வதேச மட்டத்திலான முக்கியமான தலைவர்கள், உலகளாவிய நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஏனைய முக்கியஸ்தர்களுடன் உயர்மட்ட இருதரப்புப் பேச்சுகளை முன்னெடுக்கப் பிரதமர் திட்டமிட்டுள்ளார். இந்த மாநாட்டில் அரச தலைவர்கள், முன்னணி பன்னாட்டு நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தொழில்நுட்பப் புத்தாக்கச் சிந்தனையாளர்கள் உட்பட மூவாயிரத்துக்கும் மேற்பட்ட உலகளாவிய தலைவர்கள் ஒன்றிணையவுள்ளனர். (க)

நாளை
புதன்கிழமை - தை 07
21.01.2026
சுபநேரம் : 05.05 - 06.35
ராகுகாலம் : 12.35 - 02.05

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களைத் தூண்டவே ஜனாதிபதி தவறான கருத்து

## சாகர காரியவசம் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.20**

**யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களைத் தூண்டிவிடும் விதத்தில் ஜனாதிபதி கருத்து வெளியிட்டுள்ளார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் குற்றஞ்சாட்டியுள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது "சிங்கள மக்கள் விகாரைக்கு வருவது வழிபடுவதற்கு அல்ல வைராக்கியத்தை விதைக்கவே" என்ற கருத்து மூலம் சிங்கள மக்கள் யாழ்ப்பாணம் வந்தால் கவனித்துக்கொள்ளுங்கள் என்ற அர்த்தத்தையே அவர் வழங்குவதற்கு முற்பட்டுள்ளார். சிங்கள மக்களைத் தூண்டுவதற்கு அல்ல, தமிழ் மக்களை தூண்டுவதற்காகவே தவறான கருத்தை வழங்கியுள்ளார்.

ஓமந்தைக்கு அப்பால் செல்வதற்குரிய சுதந்திரம் மக்களுக்கு முன்பு இருக்கவில்லை.

ஆனால் 30 வருடகாலப் போரை முடிவுக்குக் கொண்டுவந்ததால் தான் இன்று ஜனாதிபதியால் சுதந்திர மாக நடமாடமுடிகின்றது - என்றார். (எ-44)



## அலரி மாளிகையில் தைப்பொங்கல் விழா

கொழும்பு, ஜன.20

தைப்பொங்கல் பண்டிகையின் தேசிய கொண்டாட்டம் அண்மையில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் பங்குபற்றுதலுடன் அலரி மாளிகையில் நடைபெற்றது.

இந்தத் தைப்பொங்கல் விழாவைப் பிரதமர் அலுவலகம், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் இந்து சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

பிரதமர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி ஆகியோரின் தலைமையில் தைப்பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்றதுடன், இந்த விழாவில் இந்து கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் பல்வேறு கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச)

## துறைமுகக் களஞ்சியசாலையில் பெருந்தொகை உப்புத் தேக்கம்

கொழும்பு, ஜன.20

இறக்குமதி செய்வதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவடைந்த பின்னர், இறக்குமதி செய்யப்பட்ட சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட உப்புக் கொள்கலன்கள், கடந்த 6 மாதங்களுக்கும் மேலாக, துறைமுகக் களஞ்சியசாலையில் தேக்கமடைந்துள்ளன. அதேநேரம், தரமற்றவை மற்றும் இலங்கை தரநிர்ணய நிறுவனத்தின் அனுமதி தாமதமான மேலும் சுமார் 700 உப்புக் கொள்கலன்களும் சுங்கப்பிரிவின் சில இடங்களில் தேக்கமடைந்துள்ளன.

நாட்டில் கடந்த வருடம் நிலவிய உப்புத் தட்டுப்பாட்டை அடுத்து, உப்பு இறக்குமதி செய்ய தனியார் இறக்குமதியாளர்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியிருந்தது. இதுதொடர்பாக அரசாங்கம் வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கமைவாக, கடந்த வருடம் ஜூன் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் உப்பு இறக்குமதி செய்யப்படவேண்டும். இருப்பினும், குறித்த காலக்கெடு முடிவடைந்த பின்னர், இறக்குமதியாளர்களால் உப்பு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு கொண்டுவரப்பட்ட உப்புக் கொள்கலன்களே தற்போது துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

தேங்கியுள்ள கொள்கலன்களை மீண்டும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுமாறு இறக்குமதியாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அவர்கள் இதுவரை அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று சுங்கப் பணிப்பாளர் சந்தன புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (க)



## கல்விச்சீர்திருத்தம் நிச்சயம் நடக்கும்

### அமைச்சர் உபாலி திட்டவட்டம்

கொழும்பு, ஜன.20

எந்தக் காரணத்துக்காகவும் கல்விச் சீர்திருத்தத்தைக் கொண்டுவருவதில் இருந்து பின்வாங்கப் போவதில்லை என கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

கிரிபத்கொடவில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொழில்நுட்பக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கல்விச் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## புதிய அரசியலமைப்பு கலந்துரையாடல் நாளை

கொழும்பு, ஜன.20

புதிய அரசியலமைப்பை உருவாக்கும் செயல்முறை தொடர்பாக சட்ட அறிஞர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட முதற்கட்டக் கலந்துரையாடல் நாளை கொழும்பில் நடைபெறவுள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய, அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க மற்றும் ஹர்ஷன நாணயக்கார ஆகியோர் இதற்காக அதிகாரபூர்வமாக அழைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் எதிர்க்கட்சியின் பல அரசியல் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும், அரசியலமைப்பு உருவாக்க செயல்முறை தொடர்பான சிறப்பு உள்ளக கலந்துரையாடலாக இது நடைபெறுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

## கொம்பனித் தெருவில் மேம்பாலம்

கொழும்பு, ஜன.20

கொழும்பு கொம்பனித் தெருவில் 3.2 பில்லியன் ரூபா செலவில் புதிய மேம்பாலம் ஒன்று நேற்றுத் திறக்கப்பட்டுள்ளது.

திறப்பு விழாவில் கொழும்பு மாநகரசபையின் மேயர் வ்ராய் கெலீ பல்தசார், மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (எ-இ)

பளை, இந்திராபுரம் முதியோர் சங்கத்தின் பொங்கல் விழா இந்திராபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் சிறுவர்கள், முதியவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (க-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துக்கு முற்போக்குச் சிந்தனை வேண்டும்

## பிரதி அமைச்சர் பிரசன்ன அறிவுரை

**கொழும்பு, ஜன.20**

**புதிய கல்விச் சீர்த்திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டாம் என்று அரசியல்வாதிகள் கூறுகின்றனர். ஆனால் புதிய கொள்கையை நடைமுறைப்படுத்துமாறு பொது மக்கள் வலியுறுத்துகிறார்கள். எதிர்க்கட்சிகளின் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பிள்ளைகளின் எதிர்காலத்தை இல்லாதொழிக்கமுடியாது என்று போக்குவரத்துப் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தெருவில் நாய் ஒன்று குரைக்கும் போது ஏனைய நாய்களும் சேர்ந்தே குரைக்கும். ஆரம்பத்தில் அந்த நாய் ஏன் குரைத்தது என்பதை ஏனைய நாய்கள் அறியாது. குரைத்ததற்காகக் குரைக்கும். அந்த நிலையில்தான் எதிர்க்கட்சியினர் இன்று இருக்கிறார்கள். புதிய கல்விக் கொள்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, விமல் வீரவன்ஸவின் நிலைக்கு செல்லாமல் முற்போக்கான சிந்தனையுடன் செயற்பட வேண்டும்-என்றார். (எ-இ)

# இனவாதத்தைத் தூண்ட அநுர அரசாங்கம் முயற்சி

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.20

நாட்டில் இனவாதத்தைத் தூண்டுவதற்கு ஒரு போதும் இடமளிப்பதில்லை என்றும் தெரிவிக்கும் அநுர தலைமையிலான அரசாங்கம், இனவாதக் கருத்துகளைப் பரப்பி நாட்டுக்குள் மீண்டும் இனவாதத்தைத் தூண்ட முயற்சிக்கின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஜனாதிபதி கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் தெரிவித்த கருத்துத் தொடர்பில் மக்கள் மத்தியில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் மீண்டும் இனவாதத்தைத் தூண்டாமல் அனைவரும் இலங்கையர்களாக ஒன்றாக எழுந்திருக்கவேண்டும். தெற்கில் ஒரு விதமாகவும், வடக்குக்குச் சென்று அதனை வேறு விதமாகவும் கூறி நாட்டு மக்களை ஏமாற்றுவதை அரசாங்கம் நிறுத்தவேண்டும். வடக்குக்குச் சென்று வாக்குறுதிகளை வழங்கிவிட்டு, அதைத் தெற்கில் விமர்சிக்கின்றனர். பௌத்தர்கள் நாட்டில் இருக்கும் எந்த விகாரைக்கு வழிபடச் சென்றாலும் அவர்கள் வைராக்கியத்துடன் செல்வதில்லை. ஜனாதிபதியே வைராக்கியத்துடன் செல்கின்றார்.

வைராக்கியத்தைப் பரப்புவதும் ஜனாதிபதியும் அவரது சீடர்களுமே. ஜனாதிபதி ஆட்சிக்கு வரும் முன்னர் தெரிவித்த எதையும் தற்போது செயற்படுத்துவதில்லை-என்றார். (க)

# சிறந்த அரசியல் கலாசாரத்தை உருவாக்க அழைக்கிறார் நாமல்

கொழும்பு, ஜன.20

சிறந்த அரசியல் கலாசாரத்தை தோற்றுவிப்பதற்கு இளைஞர்கள் எம்முடன் கைகோர்க்கவேண்டும் என்றும், மக்கள் எதிர்பார்க்கும் நாட்டைத் தம்மால் உருவாக்கமுடியும் என்றும் பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

களனியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டு மக்கள் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தார்கள். ஆனால் மக்களின் எதிர்பார்ப்பு இன்று கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தை நாங்கள் நெருக்கடிக்குள்ளாக்கவில்லை. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும் என்றே வலியுறுத்துகிறோம். தேசியப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய எந்தத் திட்டங்களையும் அரசாங்கம் செயற்படுத்தவில்லை.

இலங்கைக்கே உரித்தான பொருளாதார அம்சங்களுடன் நாடு என்ற ரீதியில் நாம் முன்னோக்கிச் செல்லவேண்டும். அதற்கான திட்டங்களை எமது ஆட்சியில் நாங்கள் செயற்படுத்துவோம். பொருளாதாரத்தை முன்னேற்றுவோம்-என்றார். (எ-இ)



# வடக்கு, தெற்கில் மாற்றிப்பேசி மாற்றத்தை ஏற்படுத்தமுடியாது

## சமார சம்பத் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜன.20

வடக்கில் ஒன்றையும், தெற்கில் வேறொன்றையும் பேசி நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என நினைப்பது தவறு. நாட்டில் இன்று இனவாதம் இல்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய தேசிய அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள அவரை வரவேற்கும் நிகழ்வு நேற்று பதுளையில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

ஸ்ரீமாபோதிக்கு அப்பால் சென்று வழிபடவேண்டாம் என ஜனாதிபதி கூறுகின்றார். வடக்கில் ஒன்றையும், தெற்கில் வேறொன்றையும் கூறி நாட்டை மாற்றலாம் என ஜனாதிபதி நினைக்கின்றார் போலும். நாட்டில் இன்று இனவாதம் என்பது வடக்கிலும் இல்லை, தெற்கிலும் இல்லை. எனவே, இரு வேறு பகுதிகளில் இரு வேறு விதத்தில் கதைக்கவேண்டியதில்லை-என்றார். (எ-44)

# 10 வாக்குறுதிகளை நிறைவேற்றிய ஜனாதிபதி அநுர

கொழும்பு, ஜன.20

ஜனாதிபதித் தேர்தலின்போது வழங்கப்பட்ட 30 முக்கியமான தேர்தல் வாக்குறுதிகளில் 10 வாக்குறுதிகளை நவம்பர் மாதத்துக்குள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நிறைவேற்றியுள்ளாரென்றும் மேலும் 10 வாக்குறுதிகளை நிறைவேற்றத் தொடங்கியுள்ளாரென்றும் வெரிட்டே ரிசர்ச் ஆய்வு நிலையம் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது.

மீதமுள்ள 10 வாக்குறுதிகளில் 9 வாக்குறுதிகள் தொடர்பில் நவம்பர் மாதத்துக்குள் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லையென்றும் ஜனாதிபதியால் ஒரு வாக்குறுதியை நிறைவேற்றவே முடியவில்லையென்றும் வெரிட்டே ரிசர்ச் தெரிவித்துள்ளது. (எ-இ)

# பௌத்த மதத்தின் தனித்துவத்தை உணர்ந்து கருத்து வெளியிடுங்கள்

## ஜனாதிபதிக்கு சஜித் அறிவுரை

கொழும்பு, ஜன.20

பௌத்த மதத் தலங்களை வழிபடுவது தொடர்பாக ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்து அடிப்படைவாதத்தை ஊக்குவிப்பதாக இருக்கின்றது. அதை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சஜித் பிரேமதாஸ

நமது நாட்டின் அரசமைப்பில் கூறப்பட்டுள்ள உச்சசட்டத்தின்படி, பௌத்தம் விசேட ஸ்தானத்தைப் பிடித்துள்ளது. இதில் கூறப்பட்டுள்ளபடி, பௌத்த மதத்தைப் பாதுகாப்பது போலவே ஏனைய மதங்கள் மற்றும் கலாசாரங்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்கியுள்ளது. போயா தினத்தில் [illegible] சிறி மகா போதியை [illegible] பாட்டுத் தலங்களுக்கு வழிபடவருகிறார்கள். இங்கு இருப்பது குரோதம் தான் என்று அண்மையில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஜனாதிபதியின் இந்தக் கூற்றை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அரசமைப்பைப் புரிந்துகொள்ளவேண்டும். பௌத்த மதத்துக்கு வழங்கப்பட்ட தனித்துவமான மற்றும் முக்கியமான இடத்துக்கு முரணான கருத்துகளை வெளியிடக்கூடாது.

மதங்களையும் அவற்றின் கலாசாரங்களையும் பாதுகாக்கவேண்டும். இந்த ஒற்றுமையும் நல்லிணக்கமும் பாதுகாக்கப்படும்வகையில் நாம் நடந்துகொள்ள வேண்டும்.

இதனால் பாதுகாப்பான நாடு உருவாகும். [illegible] பாதுகாப்பு உறுதிப்ப[illegible]-என்றார். (எ-இ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுக்கு வரி விதிக்க ஐரோப்பிய நாடுகள் திட்டம்!

நியூயோர்க், ஜன.20

கிறீன்லாந்து விவகாரத்தில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வரி விதிப்பை அறிவித்துள்ளநிலையில், நேற்று முன்தினம் ஐரோப்பிய நாடுகளின் பிரிதிநிதிகள் அவசர கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். அமெரிக்கா மீது 93 பில்லியன் யூரோ வரிகளை விதிக்கவும், அமெரிக்க நிறுவனங்களைச் சந்தையில் இருந்து கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் அதில் பரிசீலிக்கப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. கிறீன்லாந்தை அமெரிக்கா வாங்குவதற்கான ஒப்பந்தம் எட்டப்படும் வரை, எதிர்வரும் முதலாம் திகதி முதல் 10 சதவீத வரிகள் விதிக்கப்படும் என்றும், அந்த வரியானது எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் 25 சதவீதமாக அதிகரிக்கும் என்றும் ட்ரம்ப் அறிவித்துள்ளார். ட்ரம்பின் அச்சுறுத்தல்களுக்கு பதிலளிக்கும் விதமாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. (எ-இ)

# அதிவேக ரயில்கள் விபத்து; ஸ்பெயினில் 39 பேர் சாவு

லண்டன், ஜன.20

தெற்கு ஸ்பெயினில் இரண்டு அதிவேக ரயில்கள் மோதி விபத்துக்குள்ளானதில் 39 பேர் உயிரிழந்துள்ளனர். 100க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகின்றது.

சிதைந்த ரயில் பெட்டிகளுக்குள் சிக்கியுள்ள வர்களை மீட்கும் பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன என்று மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (எ-இ)

மாபிள் வேலை
உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
1 சதுர அடி - 85 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 110 ரூபா
தொடர்பு: 077 334 1281
(CR 469241) E

# சிலியில் காட்டுத் தீ; 18 பேர் உயிரிழப்பு

சிலியில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயில் சிக்கி 18 பேர் உயிரிழந்துள்ளனர். 100க்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாகி யுள்ளன.

சிலியின் தலைநகர் சாண்டியாகோவிற்கு தெற்கே சுமார் 500 கிலோமீற்றர் தொலைவில் உள்ள உபிள் மற்றும் பயோபியோ பிரதேசங்களில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. கடலோர நகரமான கான்செப்சியனை ஒட்டிய வறண்ட காடுகளில் தீ இடைவிடாமல் எரிந்துவருவதால், அந்தப் பகுதி புகைமண்டலமாக காட்சி அளிக்கின்றது.

தீயை அணைப்பதற்கு தீயணைப்பு வீரர்கள் போராடுகின்ற போதும், பலத்த காற்று காரணமாக தீயை அணைக்கும் பணியில் சிக்கல் நீடிக்கின்றது என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

(எ-இ)



யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடாத்திய தைப்பொங்கல் விழா சமாச முன்றலில் இடம்பெற்றது. (சு-17)

வாடகைக்கு வீடு தேவை
மூன்று பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு
யாழ் நகரை அண்டிய பகுதியில்
வாடகைக்கு வீடு தேவை.
தொடர்புகளுக்கு:-
076 408 6163
(CS65504) J-1

கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி ரஜனி சதாசிவன் அவர்களது பாசமிகு தந்தையார்
பொன்னம்பலம் சண்முகதேவர்
அவர்கள் 19.01.2026 அன்று இறைபதமடைந்தார்.
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி
நடராசா தங்கமலர்
பிறப்பு 29.12.1949
இறப்பு 23.01.2023
20.01.2026

ஆண்டுகள் மூன்றாகிவிட்டது
ஆறவில்லை எங்களின் துயரம் அம்மா
ஆறாத துயரை நாங்கள் அனுபவிக்க
நீங்கள் மீளாத்துயில் கொண்டீர்கள்

நீங்கள் தந்த நல்ல நினைவுகள்
எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறது
உங்களின் ஆயுள் கணக்கை
மாற்றி போட்டிருக்கலாம் இறைவன்
மனமிரங்க மறுத்தரோ இறைவனும்

இல்வாழ்க்கை இவ்வுலகில் போதுமென
விண்ணுலகில் வாழ்ந்திட நீங்கள்
விரைந்து தான் சென்றீர்கள்
விடியும் பொழுதெல்லாம் உங்கள்
நினைவே எங்கள் மனதெல்லாம்

தங்களின் ஆத்மா சாந்தி பெற்று
சிவனடி சேர சிந்தை நிறைய
வேண்டி வணங்குகிறோம் "அம்மா"
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

"சிவசனுஜாஸ் இல்லம்"
இல. 55,
அம்பலவாணர் வீதி,
[illegible] யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
உரிமையாளர் -
மைதிலி நகைமாடம் (Pvt) Ltd)
யாழ்மைதிலி ஜுவலர்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்பத்து ஊடான புத்தளம் வீதியை மக்கள் பாவனைக்கு விடுவியுங்கள்


## சிவில் அமைப்புகளின் ஒன்றியம் கோரிக்கை

**மன்னார், ஜன.20**

**மன்னாரில் இருந்து வில்பத்து ஊடாக புத்தளம் செல்கின்ற பிரதான வீதி, அதிகாரிகளின் அசமந்தப்போக்குக் காரணமாக இன்னும் விடுவிக்கப்படவில்லை. எனவே மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்த குறித்த வீதியை உடன் விடுவிக்கவேண்டும் என்று சிவில் அமைப்புகளின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.**

ஒன்றியத்தால் மன்னாரில் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் தெரிவிக்கப்பட்டதாவது-

எழுங்குளம் ஊடாக மன்னார் புத்தளம் பிரதான வீதி 2018ஆம் ஆண்டுக்குப் பின்னர் மூடப்பட்டுள்ளது. மன்னாரில் இருந்து மறிச்சுக்கட்டி ஊடாக புத்தளம் செல்கின்ற குறித்த பாதை ஊடாக, சுமார் 90 கிலோமீற்றர் தூரம் மக்கள் பயணிக்கவேண்டும். ஆனால் 5 மணித்தியாலங்கள் கடந்து தற்போது குறித்த பகுதிக்குப் பயணிக்கவேண்டியுள்ளது. மன்னார் மாவட்டம் முசலிப் பிரதேசத்தில் உள்ள மக்கள் உள்ளடங்கலாக வடக்கு மக்களும் வில்பத்து ஊடான பிரதான வீதியூடாகப் பயணங்களை முன்னெடுக்கவேண்டும். இதனால் மக்கள் போக்குவரத்துக் கெடுபிடிகளைக் குறைத்து, பொருளாதார ரீதியாக பல்வேறு நன்மைகளையும் அடையமுடியும். மன்னார்-புத்தளம் பிரதான வீதி, தேசிய வில்பத்து பிரதான வீதியூடாகச் செல்லக்கூடிய பிரதான வீதியாகக் காணப்பட்டாலும், குறித்த வீதிகளில் எந்தநேரமும் விலங்குகளின் அச்சுறுத்தல் உள்ளது. எனினும் வில்பத்து ஊடாக புத்தளம் செல்கின்ற பிரதான வீதியூடாகப் பயணித்தால் வனவிலங்குகளால் எவ்விதப் பாதிப்புகளும் ஏற்படாது. எனவே மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்துகொண்ட ஜனாதிபதி, குறித்த வீதியை விடுவித்து, மக்களின் போக்குவரத்தை இலகுபடுத்தவேண்டும்-என்றனர். (க-56)



தென்மராட்சிப் பிரதேச செயலக தைப் பொங்கல் விழா, பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (க-9)



# மலரும் மூளாய் அபிவிருத்தி மையத்தின் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.20

மலரும் மூளாய் அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் தைப் பொங்கல் விழா, மூளாய் பிரசாத் அரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் பாரம்பரிய போட்டிகளான மாஇடித்தல், முட்டி உடைத்தல், கீரை வகைகளை இனங்காணல் உள்ளிட்ட பல போட்டிகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன.

மையத்தின் தலைவர் தி.அம்பிகை தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ். மாநகரசபை ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன், ஓய்வுநிலை நிர்வாக அதிகாரி வி.உதயசூரியன், வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் உறுப்பினர் வே.சச்சிதானந்தம், கிராம அலுவலர் வ.சிவரூபன் மற்றும் கிராம மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-27)




அறிவாலயத்துடன் இணைந்து மக்கள் கலை இலக்கியப் பேரவை நடத்திய இளையோர் புத்தக அரங்கக் கொண்டாட்டம் கடந்த வாரம் இணுவிலில் இடம்பெற்றது. (க)



பிரதேச அறநெறிப்பாடசாலைகளின் தைப்பொங்கல் நிகழ்வுகள், சங்கத்தானை ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய முன்றலில் அண்மையில் இடம்பெற்றது. சங்கத்தானை வைரவசுவாமி கந்தசுவாமி ஆலய பரிபாலன சபையினரது அனுசரணையுடன், சங்கத்தானை வைரவசுவாமி கந்தசுவாமி அறநெறிப்பாடசாலை மற்றும் மறவன்புலோ பித்தர்புலம் அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் சிறார்கள் இதில் பங்கேற்றனர். (க-19)



தைப்பொங்கலை முன்னிட்டு நீர்வேலித் தெற்கு ஸ்ரீ சுப்பிரமணியம் சனசமூக நிலையம் நடத்திய தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுப்போட்டிகள் மற்றும் பரிசில் வழங்கல் நிகழ்வுகள் நிலைய முன்றலில் இடம்பெற்றன. (க-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கான

# மாற்றுச் சட்டத்திலும் ஆபத்தான அம்சங்கள்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கை

கொழும்பு, ஜன. 20

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றாக, தற்போது உருவாக்கப்படும் சட்டமும் பல ஆபத்தான விடயங்களை உள்ளடக்கியுள்ளது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரித்துள்ளது.

இலங்கையில் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றாக புதிய சட்டமொன்றை தற்போதைய அரசாங்கம் உருவாக்கியுள்ளது. புதிய சட்டம் தொடர்பில் பல்வேறு வகையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான நிலையிலேயே, அந்தச் சட்ட ஏற்பாடுகளை மனித உரிமைகள் கண்காணிப்பகம் கண்டித்துள்ளது.

பயங்கரவாதத்தில் இருந்து அரசாங்கத்தைப் பாதுகாக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள புதிய சட்டம் மிக மோசமான கூறுகளைக் கொண்டுள்ளது. இந்தச் சட்டத்தால் மக்களின் உரிமைகள் பறிக்கப்படச் சாத்தியங்கள் உள்ளன. அத்துடன், ஒடுக்குமுறை இடம்பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் தன்மை மிக்கதாகவும் உள்ளது என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கான மாற்றுச்சட்டம், சர்வதேச நியமங்களுக்கு அமையவோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக் கொள்ளக்கூடிய வாறோ அமையவில்லை. ஆதலால், விரிவான பேச்சுவார்த்தை மூலம் சரியான சட்டங்களை உருவாக்கும் பணியில் ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் ஈடுபட வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் - மேலும் கூறியுள்ளது.

(ம)

## ஜே.வி.பி.யின் கடைசி ஜனாதிபதியே அநுர!

### பொதுஜன பெரமுன கூறுகின்றது



கொழும்பு, ஜன.20

ஜே.வி.பி.யின் கடைசி ஜனாதிபதிதான் அநுரகுமார திஸாநாயக்க. இனி அந்தக் கட்சியுடன் தொடர்புடைய எவராலும் ஜனாதிபதி பதவிக்கு வரமுடியாது என்பது உறுதி என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் 2026ஆம் ஆண்டுக்குரிய முதலாவது கூட்டத்தை ஜனாதிபதியின் சொந்த ஊரிலேயே (தம்புத்தேகம) நடத்திக் காட்டினோம். கூட்டத்தை நடத்துவதற்கு பல தடைகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் மக்கள் அணிதிரண்டுவந்து சிறந்த பதிலை வழங்கினர். பொய்களை நம்பி ஏமாந்தது போதும் என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர். எனவே, நாட்டை நேசிக்கக்கூடிய ஒருவரை மக்கள் தெரிவு செய்வார்கள்-என்றார்.

(எ-44)

### அரசாங்கத்துக்குள்...

மன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது.

இந்த வழக்கின் பின்னர் சரத் வீரசேகர ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:

திருகோணமலை புத்தர்சிலையை 2004ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் போரிட்டே பாதுகாத்தோம். தற்போதும் இத்தகைய போராட்டங்கள் தொடர்கின்றன. அரசாங்கத்தில் உள்ள பிரபாகரன்கள், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தில் உள்ள பிரபாகரன்கள் ஆகியோரிடம் இருந்து புத்தர் சிலையைப் பாதுகாக்க போராட்டம் நடத்த வேண்டியுள்ளது. இது மிகவும் கவலைக்குரிய நிலைமை யாகும்.

தேரவாத பௌத்த நாட்டில் புத்தர்சிலையைப் பாதுகாக்க முடியாத தையிட்டு வெட்கப்பட வேண்டும். நாட்டில் தற்போது இருள்சூழ்ந்த காலகட்டம் ஏற்பட்டுள்ளது. அதனால்தான் தேரர்களைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர் - என்றார். (அ-ம-44)

### நீராடச்...

துயரச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. வவுனியா - கோவில் புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த சிவலிங்கம் டனுசியன் (வயது - 18) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தவனாவான். 4 மாணவர்கள் இணைந்து நீராடச் சென்றவிடத்திலேயே இந்த அசம்பாவிதம் நிகழ்ந்துள்ளது. மாமடுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-110)


**பராமரிப்பாளர் தேவை**

வயோதிப ஆண் ஒருவரைப் பராமரிக்க பராமரிப்பாளர் உடன் தேவை.

**070 7100 102**

(CS 31053)A

## சேவை நலன் பாராட்டு



யாழ். போதனா வைத்தியசாலையில் 33 வருடங்களாக தாதிய உத்தியோகத்தராகவும் விடுதி பொறுப்புத் தாதிய உத்தியோகத்தராகவும் கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும்

**திரு.சந்திரசேகரம் சுதாகரன்**

**(Supra Grade Nursing Officer)**

அவர்களது சேவையைப் பாராட்டுவதோடு ஓய்வுகாலத்தில் சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.




**தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச்சங்கம்**

**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 25 . 11 . 1949 |  | 18 . 01 . 2026 |

### குலகுணேஸ்வரி கந்தையா

"ஆனந்தகம்" கந்தரோடையை பிறப்பிடமாகவும் மூளாய், கந்தரோடையை வதிவிடமாகக் கொண்டவருமான குலகுணேஸ்வரி கந்தையா கடந்த 18.01.2026 ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஸ்தாபகர் அமரர் கந்தையா உபாத்தியாயர் அவர்களின் பேர்த்தியும், சி.மு அப்புத்துரை- சேதுநாயகி தம்பதியினரின் மகளும், அமரர் சண் கந்தையா (யாழ். மாநகர சபை பொது நூலக ஓய்வு பெற்ற நூலகர்) அவர்களின் அன்பு மனைவியும், குமுதினி (ஆசிரியர்), ஜபாலினி, துவாரகன் (பொறியியலாளர்), மைதினி, மாதினி ஆகியோரின் அன்புத் தாயாரும், விஸ்வநாதன், பிரணவன், திலீபன், துஷந்தன், நாராயணி ஆகியோரின் மாமியாரும், அமரர் தற்பரானந்தன் (ஓய்வு பெற்ற கோட்டக் கல்வி பணிப்பாளர்), நித்தியானந்தன், சர்வானந்தன், குலகுணராணி, குலகுணசக்தி, அமரர் தேவானந்தன் (பொறியியலாளர்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற தெய்வநாயகி, நகுலாம்பிகாதேவி, ஹேமாங்கினி, சித்ரா, செல்வக்குமாரன் (ஓய்வு பெற்ற அதிபர்) ஆகியோரின் மைத்துனியும், அட்சயா, அகரன், திரிஷ்மன், தனுர்மன், ஆதிரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (21.01.2026) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கந்தரோடை சங்கம் புலவு இந்து மயானத்தில் தகன கிரியைகள் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**'ஆனந்தகம்'**
**கந்தரோடை, சுன்னாகம்.**
**021 224 0129**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 31052) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த...

பேச்சாளர் வுட்லர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

2025ஆம் ஆண்டில் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகள் மற்றும் தேடுதல்களில் 821 கிலோ ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. அத்துடன், 17 ஆயிரத்து 189 கிலோ கஞ்சாவும், 3 ஆயிரத்து 865 கிலோ ஐஸ் போதைப்பொருளும், 40 லட்சம் போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவற்றில் 495 கிலோ ஹெரோய்ன் போதைப்பொருள் அழிக்கப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் இதுவரை 171 கிலோ போதைப்பொருள் அழிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-ம-44)

## செம்மணிப்...

செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பான வழக்கு, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் எஸ்.லெனின் குமார் முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. அகழ்வுப் பகுதியை நீதவான் எஸ்.லெனின்குமார், சட்டமருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், சட்டத்தரணிகளான வி.எஸ். நிரஞ்சன், ரனித்தா ஞானராஜா, குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் மற்றும் பொலிஸார் அடங்கிய குழுவினர் நேற்று மாலை நேரில் சென்று பார்வையிட்டனர். அகழ்வுப் பகுதியில் வெள்ளநீர் நிரம்பிக் காணப்படுவதால், பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி நல்லூர் பிரதேச செயலகத்தின் உதவியைப் பெற்று தண்ணீரை அகற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெள்ளநீரை அகற்றிய பின்னர் அகழ்வு பணிகளை எப்போது ஆரம்பிப்பது எனத் தீர்மானிக்கப்படவுள்ளது. இதற்கு ஏதுவாக இந்த வழக்கு, பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி மீளவும் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

செம்மணி மனிதப்புதைகுழியில், இதுவரையில் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது 240 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்தன. அவற்றில் 239 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## அகழ்வுப்...

தாலும், 2025ஆம் ஆண்டு நிறைவுடன் அந்த நிதி திரும்பிச் சென்றுள்ளது. இதையடுத்தே, எதிர்கால அகழ்வு நடவடிக்கைக்காக பட்ஜெட்டை மீளவும் முன்வைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. சட்ட மருத்துவ அதிகாரி இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## கைதான...

தில், 4 தேரர்கள் உட்பட 9 பேருக்கும் எதிரான விளக்கமறியல் உத்தரவு எதிர்வரும் 28ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

கரையோர பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தை மீறி கடற்கரையில் கட்டுமானத்தை அமைத்தமை மற்றும் சிலை வைத்தமை தொடர்பில், வனவாசி பலங்கொட கசியப்ப தேரர், திருகோணமலை கோட்டை விகாராதிபதி கல்லூன வன்ஸ திஸ்ஸ தேரர், சுகித்த வன்ஸ தேரர், சிறிமாபுர விகாரையைச் சேர்ந்த நந்த தேரர் ஆகிய தேரர்கள், மற்றும் கோட்டை விகாரையின் நிர்வாகக் குழு உறுப்பினர்களுமாக 9 பேர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் நேற்று மீண்டும் விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே, சந்தேகநபர்களுக்கு எதிரான விளக்கமறியல் உத்தரவு எதிர்வரும் 28ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது. இதேவேளை, கடந்த 14ஆம் திகதி வழக்கு விசாரணைக்காக எடுக்கப்பட்ட போது மன்றுக்குச் சமுகமளிக்காத எதிராளிகளில் ஒருவர் நேற்று முன்னிலையானார். இதையடுத்து, அவரும் மறியலுக்கு அனுப்பப்பட்டார். (அ-ம-50)

## ரூபா...

டுள்ளது என்று இலங்கை மத்திய வங்கித் தரவுகளின் அடிப்படையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 305.95 ரூபாவாகவும், விற்பனைப் பெறுமதி 313.49 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 408.33 ரூபாவாகவும், விற்பனைப் பெறுமதி 421.06 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 354.21 ரூபாவாகவும், விற்பனைப் பெறுமதி 365.73 ரூபாவாகவும், பதிவாகியுள்ளது. (அ-ம)

## எலிக்...

என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 14ஆம் திகதிமுதல் அந்த நபர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார். எனினும், முறையான சிகிச்சைப் பெறவில்லை. நேற்று அதிகாலை குருதி வாந்தி எடுத்ததைத் தொடர்ந்து, உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். எனினும், மேலதிக சிகிச்சையின் போது அவர் உயிரிழந்தார்.

எலிக்காய்ச்சல் காரணமாகவே இறப்புச் சம்பவித்தது என உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ம-26)

## கந்தரோடை...

பிரகாஷிடம் நேற்றுத் திங்கட்கிழமை பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் சுன்னாகம் பொதுச்சந்தைக்கு அருகில் தனியார் காப்புறுதி நிறுவனமொன்றால் 'கந்தரோடை விகாரை' எனத் திசை காட்டும் பெயர்ப்பலகை நடப்பட்டிருந்தது. பிரதேசசபையின் தீர்மானத்துக்கு அமைய அந்தப் பெயர்ப்பலகை கடந்த 8ஆம் திகதி அகற்றப்பட்டது. இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே, தவிசாளர் பிரகாஷிடம் நேற்று விசாரணைகள் இடம்பெற்றதுடன், வாக்குமூலமும் பெறப்பட்டுள்ளது.

இதன்போது அகற்றப்பட்ட பெயர்ப்பலகையையும் பொலிஸார் நேரடியாகப் பார்வையிட்டனர். பெயர்ப் பலகையை அகற்றிய வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் பணியாளர்களில் ஒருவரிடமிருந்து வாக்குமூலம் பெறவேண்டுமெனச் சுன்னாகம் பொலிஸார் கேட்டுக் கொண்டபோதிலும், வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் தவிசாளர் அதற்கு மறுப்புத் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-26)

## தமிழரசின்...

அதேபோன்று இந்த விவகாரத்தில் அநுர தரப்பினர் குத்தி முறியவும் தேவையில்லை. மக்கள் மத்தியில் தமிழரசுக் கட்சியை மலினப்படுத்தும் அவர்களின் கனவும் ஒருபோதும் பலிக்காது. தமது அரசியலுக்காக, எமது கட்சியை விமர்சனம் செய்வதை ஒருபோதும் ஏற்க முடியாது. எமது கட்சி விடயங்களை நாங்கள் பார்த்துக்கொள்வோம்' என்றார்.

ஜனாதிபதி அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் தமிழரசுக் கட்சியின் சிரேஸ்ட தலைவர்கள் தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்திருந்தனர். இதற்குப் பதிலடியாகவே சீ.வீ.கே.சிவஞானம் இவ்வாறு தெரிவித்துள்ளார். (அ-ம-26)

## தன்னிச்சைப்...

வித்தார். யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசாங்க நிகழ்வென்றால், ஏனைய கட்சிகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். ஆனால், வடக்கில் அத்தகைய நிலைமை இல்லை. மக்களின் ஆதரவையும், ஆணையையும் அதிகம் பெற்றுள்ள எங்களைக்கூட பின்வரிசைகளில் அமர வைக்கும் போக்கும், புறக்கணிக்கும் செயற்பாடுமே அதிகளவில் காணப்படுகின்றது. இந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுர கவனத்திற்கொள்ள வேண்டும்.

மத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணங்களில் மாகாணசபை அவைத்தலைவர்களே கடந்த முதலாம் திகதியன்று அரச பணிகளை ஆரம்பித்து வைத்தனர். ஆனால், வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவராக உள்ள எனக்கு அது தொடர்பான அழைப்பு வரவில்லை. அதிகாரிகளின் எண்ணப்பாடு புறக்கணிப்பா? அல்லது மேலிட உத்தரவா? எனத் தெரியவில்லை.

எல்லா நிகழ்வுகளிலும் உள்ளூராட்சி சபை தேர்தலில் வென்ற தரப்புக்களை புறக்கணித்து, தேசிய மக்கள் சக்தி சார்பில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட்ட அனைவருக்கும் பொறுப்பைக் கொடுக்கின்றனர். இத்தகைய செயற்பாடுகளால் விரோதப்போக்கே வளரும். மக்களின் ஆணைப்படி தெரிவானவர்களை விலக்கி வைப்பது ஆரோக்கியமான விடயம் அல்ல - என்றார். (அ-ம-26)

## பிரதிப்...

தரம் 6 பாடத்திட்டம் தொடர்பான சர்ச்சையில், தேசிய கல்வி நிறுவகத்தின் பிரதிப் பணிப்பாளர் தர்ஷன சமரவீர கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளார். தரம் 6 பாடத்திட்ட சர்ச்சைகள் தொடர்பில் தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. விசாரணைகளைக் கருத்திற்கொண்டே அவர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## சித்துப்பாத்தி...

இந்து மயானத்தின் பாதைகள் நல்லூர் பிரதேசசபையால் செப்பனிடப்பட்டுள்ளன. இதையடுத்தே, சித்துப்பாத்தி மயானத்தின் நிலத்தோற்றத்தை மாற்றுவது அகழ்வுப் பணிகளை பாதிக்கும் என்பதால், அகழ்வுப் பணிகள் முழுமையடையும் வரை அங்கு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது பொருத்தமானது அல்ல என்று சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் சித்துபாத்தி மயானத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைக்கு நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறுவது அவசியம் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ-ம-26)

தவறவிடப்பட்டது

Driving Licence

சண்முகம் ஜெகதீஸ்வரன்

Shanmugam Jegatheswaran

103, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

103, Kasthuriyar Road, Jaffna.

தொடர்புகளுக்கு:- 077 773 3231

(CS31049) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 04 . 1970

மறைவு 19 . 01 . 2026



(CS/31031) J-1

**திருமதி பிரித்விராஜ் தேவறஞ்சினி**

(கோப்பாய் நாவலர் பாடசாலை ஆசிரியர்)

மீசாலை கிழக்கு மீசாலையை பிறப்பிடமாகவும், வச்சாவளை வீதி, கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பிரித்விராஜ் தேவறஞ்சினி அவர்கள் நேற்று (19.01.2026) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வினாசித்தம்பி - காலஞ்சென்ற செல்லமுத்து தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்ற சந்திரன் - புஸ்பராணி தம்பதியரின் அன்பு மருமகளும், பிரித்விராஜின் அன்பு மனைவியும், கார்த்திகாயினியின் அன்புத் தாயாரும், சந்திரசேகரம், குலசேகரம், கேதீஸ்வரன், சத்தியடோசன், சறோஜாதேவி, சந்திரகிரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் இன்று (20.01.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

077 187 8251

வச்சாவளை வீதி, கோப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் நிலாவரை வீதியில் 11 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு**

**நிலப்பரப்பு**

- நிலாவரை வற்றாக் கிணற்றில் இருந்து 600 m தூரம்
- பலாலி சர்வதேச விமான நிலையம் 4 Km தூரம்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்றுச் சூழல்
- வீடுகள் கட்டுவதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை புன்னாலைக்கட்டுவன் நிலாவரை வீதியை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 30 லட்சமும் 18 அடி பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 25 லட்சம் வரையும் உள்ளது.

**பார்வையிடும் நேரம் : காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை**

(CS/31047) J-1

**தொடர்புகளுக்கு : ஜெயம்**

**077 814 7389, 077 986 5457**

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 04 . 1954



மறைவு 17 . 01 . 2026

**திருமதி ராதா இராமச்சந்திரன்**

இல.77, நாயன்மார் வீதி, நல்லூரை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராதா இராமச்சந்திரன் அவர்கள் கடந்த 17.01.2026 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டிதர் கனகசபாபதி அவர்களின் பேர்த்தியும், காலஞ்சென்ற ச.இராமச்சந்திரனின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் - மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ரஞ்சித் (லண்டன்) மற்றும் ராஜேந்திரா (லண்டன்) அவர்களின் அன்புச் சகோதரியும், ர.ஜெயமணி (லண்டன்), ரா.சரோஜினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், செல்வி லக்ஷனா ரஞ்சித் (லண்டன்) அவர்களின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.01.2026) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல.77, நாயன்மார் வீதி, நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
பா.ராஜேந்திரா
074 152 1929


(CS 31050) A

**Tharany SUPERMARKET**

# 1kg சீனி வாங்கினால் 1kg சீனி இலவசம்!

**தாரணி சூப்பர் மார்க்கெட்டின் 5 வருட பூர்த்தியை முன்னிட்டு**


## மாபெரும் அதிரடிச் சலுகை!








**1kg சீனி வாங்கினால் அதே 1kg சீனி இலவசம்**




**இச்சலுகை 2026.01.21 (புதன்கிழமை) மட்டுமே**

**மேலும் பல பொருட்கள் விசேட விலைக்கழிவில்...**

ஒரு அலகிற்கு மேற்பட்ட கொள்வனவிற்கு ஒன்று மாத்திரமே வழங்கப்படும்.

**இல.758, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (தட்டாதெரு சந்திக்கு அருகாமையில்)**

**077 1997 206**

(CS 60501) E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.